மூன்றாவதுகண்

# விளம்பி

மடல் - ௨ | உள்ளூர் வளம் - தொழில் - வாழ்வு | பங்குனி - ௨0௨௨


## பொல்லடி முதுசமொன்றின் ஜீவிதம்

கிழக்கு மாகாணம், அம்பாரை மாவட்டத்திலுள்ள பழம்பெரும் கிராமங்களில் ஒன்றான இறக்காமம் பிரதேசமானது யானை கட்டும் பணிக்கர்களையும், பாட்டுக்கட்டும் புலவர்களையும், ஏடு கற்ற அறிஞர்களையும் அதிகம் கொண்டுள்ள புகழ் பூத்த கிராமமாகும். வயல் வெளிகள், காடு, மலைகள் அருவிகள் என இயற்கை வனப்புமிக்கதொரு கிராமத்தில் கலைத்துறைக்கென தனிச்சிறப்புமிக்கதொரு இடமுண்டு. அந்த ஊரில் பாரம்பரியமான கலை மரபுகள் எத்தனையோ இருந்தாலும், பொல்லடிக்கென தனிச்சிறப்பு இங்கே ஊற்றெடுத்திருக்கின்றது என்றால் அது மிகையாகாது. இவை தென்கிழக்கின் பாரம்பரியமான கலை முதுசங்களில் ஒன்றாகவும் அமைந்துள்ளது.

பொல்லடிக்கலை வடிவத்தை களிகம்பு, கோலாட்டம், கம்படி என்று பல்வேறு பெயர்களால் அழைத்தாலும், "பொல்லடி" என்பதே இதன் பிரபல்யமான பெயராகும். இப்படியான பொல்லடிக்கலையே தனது ஒரே ஆத்ம ஜீவிதமாய்க் கொண்டு வாழும் பீ.ரி.யாசின்பாவா அண்ணாவியார் என்பவரைப்பற்றிய கலை வாழ்விதமே எனது கட்டுரையாக அமையப் போகிறது.

81 வயது நிறைந்த பீ.ரி.யாசின்பாவா அண்ணாவியார் 1941.01.24 ஆந் திகதி பக்கீர்தம்பி செயினம்பு தம்பதிக்கு ஆறாவது பிள்ளையாகப் பிறந்தார். இயல்பிலேயே இவரது குடும்பம் ஒரு கலைக்குடும்பமாகும். அதிலும் குறிப்பாக பொல்லடிக் கலையை முறையாகப் பயின்று அன்றுதொட்டு இன்றுவரை உயிர்ப்பித்து வைத்திருக்கும் குடும்பம் இதுவே. தனது தந்தையான பக்கீர்தம்பி மற்றும் பாட்டன் என்போரும், தனது தாயின் தம்பியும், மாமாவுமான மஹ்மூது லெப்பை ஆதம்பாவா அவர்களும், பெரிய தந்தையான மிஸ்கின் பாவா போன்றோர்களும் பொல்லடிக் கலையை முறையாகப் பயின்ற அண்ணாவியார்களாகவும், கலைஞர்களாகவும் அறியப்படுகின்றனர்.

இரண்டாம் தரம் வரை மட்டுமே கற்றுக்கொண்ட பீ.ரி.யாசின் பாவா அண்ணாவியார் தனது தந்தையுடன் இணைந்து வியாபாரத்தை நடாத்தி வந்தார். 1962 ஆம் ஆண்டு தனது 21 ஆவது வயதில் ஜன்னதுல் வீவியை மணமுடித்துக் கொண்ட இவர், ஒன்பது பிள்ளைகளுக்கு தந்தையாகவும், 22 பேரப் பிள்ளைகளுக்கும், 14 பூட்டன்மாருக்கும் சொந்தமாகி, ஆரோக்கியத்துடன் வாழ்ந்து வருகிறார்.



**கலைப்பயணமும் பொல்லடியும்**

இறக்காமம் பிரதேசத்தில் எத்தனையோ கலை வடிவங்கள் காணப்பட்ட போதிலும், பொல்லடிக் கலையானது பிரசித்திபெற்ற ஒன்றாகவும், தனித்தன்மை வாய்ந்த அம்சமாகவும் கொள்ளப்படுகின்றது. பாடசாலைப் படிப்பை இடைநடுவில் கைவிட்ட பீ.ரி.யாசின் பாவா அண்ணாவியார் பொல்லடி, மாந்திரீகம், பேயோட்டுதல், சீனடி, நாட்டு வைத்தியம், கட்டுப்பாடலியற்றுதல், பள்ளுப்பாட்டு போன்ற பல கிராமியக் கலைகளைக் கற்பதில் ஆர்வங் காட்டலானார்.

1950 களில் தனது ஒன்பது வயதினில் பொல்லடிக் கலையை முறையாகவும், முழுமையாகவும் கற்றுக் கொண்டார். இவருக்கு இக் கலையை மறைந்த மஹ்மூதுப்போடி ஆதம்லெப்பை என்பவரே கற்பித்தார். விறகு வெட்டுதல், மீன் பிடித்தல், விவசாயம் செய்தல் போன்ற வேலைப் பளுக்களுக்கும் இடையில் இரவு நேரங்களிலும், ஓய்வு நேரங்களிலும் எல்லோரும் கூடி இப்பொல்லடிக் கலையைப் பயின்றனர். பொல்லடிக் கலையைச் சந்தம் மற்றும், பாடலுடன் பயிற்றுவிப்பவர்களையே அண்ணாவியார் என அழைக்கின்றனர். எதுவிதமான வெளிச்சமும் இல்லாத காலத்தில் நிலா வெளிச்சத்தில் பொல்லடியைப் பழகியதாகவும், தனது வாழ்வியல் நடைமுறைகளையும், கிராமியப் பிரதிபலிப்புக்களையும் வெளிப்படுத்துவதாகவும் பொல்லடி அமைவதாக பீ.ரி.யாசின் பாவா அண்ணாவியார் சுவாரஸ்யமாக மீட்டிப்பார்க்கிறார்.

இவரின் பிரபல்யமான பாடலாக ஞானக்கும்பி, ஆனந்தப்பாட்டு, வெள்ளப்பாட்டு, அம்பாரைப் பாட்டு, மீன் பாட்டு, கீச்சான் பாட்டு, வசைப் பாட்டு, பள்ளுப்பாட்டு, பஜாப்பாட்டு, ஊர்ப்பாட்டு, கட்டுப்பாட்டு போன்ற பாட்டுக்களை பொல்லடியின் போது பாடுகிறார். மேற்படி இவரால் பாடப்படும் பாட்டுக்கள் ஒவ்வொன்றும் உண்மைத் தன்மையைப் பிரதிபலிப்பதாகவும், வாழ்வியலின் பின்னணியாக அமைவதாகவும் அறிய முடிகின்றன. உதாரணமாக வெள்ளப்பாட்டானது இலங்கையில் 1957 ஆம் ஆண்டு இடம்பெற்ற வெள்ளத்தின் பிரதிபலிப்பையும், மக்கள் பட்ட பாதிப்பையும், துயரத்தையும் நினைவு கூர்வதாக அமைகிறது. அந்தப்பாடலின் ஆரம்ப வரிகளானவை:

"நீண்ட நிலையான பானையடுக்கும்
நிலத்தில் கெழிந்துளுந்து
என்தோழி நீ ஜலத்தில் கெழிந்துளுந்து
அது துண்டு துண்டாக ஒடிந்து
கிடப்பதை தோழி நீவந்தெட்டிப்பார்
என்தோழி நீவந்தெட்டிப்பார்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், இறக்காமத்தின் வீரத்தை பறை சாற்றும் யானை கட்டியாண்ட பணிக்கர்களின் மகிமையை எடுத்தியம்பும் பாட்டையும் இவர் பொல்லடியாகப் பாடியுள்ளார்.

"யானை கட்டப்போவோம் வாருங்கடா தம்பி
ஆட்களைக் கொஞ்சம் சேருங்கடா,
ஏக இறையோன் பள்ளியிலே
ஒன்றாய் கூடுங்கடா"

என்று தொடங்கும் இப்பாடல் யானை கட்டிய வரலாற்றை பாட்டினூடு கற்கிறது. பொல்லடி ஆட்டத்தை பார்க்கவரும் மக்களின் மனங்களைக் கவரவே பொல்லடியின்போது விருத்தங்கள் பாடப்படுவதாக பீ.ரி.யாசின் பாவா அண்ணாவியார் குறிப்பிடுகிறார். விருத்தம் என்பது பொல்லடிக்க ஆரம்பிக்க முன்னர் பாடப்படும் பாடல் போன்ற அமைப்பாகும். இவற்றையும் இவரே சொந்தமாக உருவாக்கிப்பாடுந் திறமை கொண்டவராக உள்ளமை குறிப்பிடத்தக்கதொரு சிறப்பாகும்.

இறக்காமத்தின் மூத்த பொல்லடிக் கலைஞரான பீ.ரி.யாசின் பாவா அண்ணாவியார் சவால்களை எதிர் கொண்டுள்ள இஸ்லாமியக் கலையான பொல்லடிக்கலையை உயிரோட்டமாக வைத்திருப்பதில் கூடிய கவனம் செலுத்தி வருகிறார்.

ஆரம்ப காலத்தில் பொல்லடியானது விஷேட வைபவங்களுக்கெல்லாம் ஆடப்பட்டுவந்தது. ஒரு நிகழ்வில் பொல்லடிக்கலை இடம்பெறுவதானது அந்த வைபவத்தின் கௌரவத்தையும், அங்கீகாரத்தையும் பெற்றுக்கொடுத்தது. பொல்லடிக்கலையில் 08 முதல் 28 வரையான ஆண்கள் பங்குகொள்வதாகவும், இதற்கென "விப்பனைக் கம்பு" எனும் காட்டுமரம் பயன்படுத்தப் படுத்தப்பட்டு, மாட்டுச்சலங்கை அணிவித்து தயார் செய்யப்படுவதாகவும் சொல்கிறார். பொல்லடியானது கிராமத்தின் முக்கிய நிகழ்வுகளான திருமணம், சுன்னத்து நிகழ்வு (முஸ்லிம்களின் கத்னா வைபவம்), பெருநாட்கள் தினம், காது குத்து வைபவம், கந்தூரி, மீலாதுந்நபி விழா கொண்டாட்டம், வாழ்வு கல்யாணங்களின் மாப்பிளைச்சோறு கொண்டு செல்லும் நிகழ்வு, மாப்பிள்ளை கூட்டு வைபவம், மருதோன்றி நிகழ்வு, பிரமுகர்களின் வரவேற்பு போன்ற நிகழ்வுகளின்போது ஆடப்பட்டு வருகிறதாகவும், எதுவிதமான எதிர்பார்ப்போ அல்லது பணமோ, பரிசுப்பொருட்களோ வாங்காமல் கலைநோக்குடன் மாத்திரம் முன்னெடுப்பதாகவும் இவர் குறிப்பிடுகின்றார்.

பீ.ரி.யாசின் பாவா அண்ணாவியார் இதுவரைக்கும் கிட்டத்தட்ட 300 இற்கும் மேற்பட்ட பொல்லடிக்கலைஞர்களை உருவாக்கியுள்ளதாகவும், 1960 காலப்பகுதியில் சாய்ந்தமருதுவில் ஒரு பெண்குழுவினருக்கு பொல்லடிக் கலையைப் பயிற்றுவித்ததாகவும் மனநெகிழ்வுடன் மீட்டுகிறார். மேலும், இவர் 1978 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜயவர்தன அவர்களின் அழைப்பின்பேரில் பொல்லடியை அரங்கேற்றி கௌரவம் பெற்றுக்கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். கிழக்கு மாகாணம் முழுவதும் பொல்லடியைப் பயிற்றுவித்த பீ.ரி.யாசின் பாவா அண்ணாவியார் அவருக்கே உரித்தான சில பொல்லடி முறைமைகளை உருவாக்கியுள்ளமை சிறப்பாகும்.

பொல்லடி வகைகளாக எட்டடி மாறல், மூனாம் கூட்டுப்பொல், பன்னிரெண்டடி மாறல், அறபாக் கூட்டல், இரண்டாம் மல்லி, மூனாம் மல்லி, ஓடக்காகம், மெத்தையடி, குட்டிமல்லி, கீச்சான் கூத்து, அனுமான் கூத்து, ஞானடி போன்றன காணப்படுகிறதாக கூறுகிறார். இதில் ஞானடி, அனுமான் கூத்து, கீச்சான் கூத்து போன்ற மூன்றும் பீ.ரி.யாசின் பாவா அண்ணாவியாரே உருவாக்கிய தனித்திறனின் கலைவடிவமாகும். மேலும், பொல்லடிக்கு முன் பாடப்படும் விருத்தம் எனப்படும் ஆரம்ப பாட்டானது இலங்கையில் எங்குமில்லாத தனச்சிறப்பு வாய்ந்ததும், இறக்காமத்திற்கே உரித்தானதுமான விருத்தமாகும். இந்தப்பெருமை பீ.ரி.யாசின் பாவா அண்ணாவியார் அவரையே சாரும் என்பதோடு, தற்காப்புக் கலைக்கும் பேர்போன ஒருவராகவும் மதிக்கப்படுகிறார். இக்கலையை கிண்ணியா ஆலிமு என்றழைக்கப்படும் ஹாமிது லெப்பை ஆலிமுடன் 5 வருடங்கள் பயின்றார். சீனடியை பயின்றாலும் அவற்றை மற்றவருக்குச் சொல்லிக் கொடுப்பதில் தயக்கம் காட்டி வந்தார். காரணம் அவை மனிதனுக்கு சில சமயங்களின் போது தீங்கு பயக்கலாம் எனும் நம்பிக்கையினாலாகும்.

### பெற்றுக்கொண்ட விருதுகளும், சவால்களும்

சிறு பராயம் முதல் கலையில் ஆர்வம் காட்டி வரும் பீ.ரி.யாசின் பாவா அண்ணாவியார் பிரதேச மட்டத்திலும், மாகாண மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் பல போட்டிகளில் கலந்துகொண்டு பரிசில்களையும், கௌரவிப்புக்களையும் பெற்றுள்ளார். 2010 ஆம் ஆண்டு நிகழ்ந்த எழுவானில் கலை விழா, 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற மாகாண கலை இலக்கிய விழா போன்றவற்றில் பொல்லடியில் முதலாமிடம் பெற்றதோடு, 2016 இல் இடம்பெற்ற இஸ்லாமிய மரபுக்கலை போட்டியில் முதலாமிடத்தையும் பெற்றார். மேலும், அரசாங்கத்தினாலும், ஏனைய அமைப்புக்களினாலும் பல விருதுகளையும், சான்றிதழ்களையும், பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

மேலும், முறையாக கிராமியக் கலைகளைப் பயின்று இன்றுவரை அதை பாதுகாத்து வருபவர் என்பதற்காக 2002.02.04 ஆம் திகதி கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் "கலாபூசணம்" விருதும், பொற்கிழியும், சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். அத்துடன், 2006 ஆம் ஆண்டு இறக்காமம் பிரதேச கலாசார இலக்கிய பேரவையினால் "இறக்காமத்தின் முதுசம்" விருது வழங்கியும் கௌரவித்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

தற்போதைய காலகட்டத்தில் கலையை கற்பதற்கான ஆர்வம் இன்றைய இளைய தலைமுறையிடம் துளியேனுமில்லை என கவலை வெளியிடும் பீ.ரி.யாசின் பாவா அண்ணாவியார், பொல்லடிக்கு அடுத்த தலைமுறை இல்லை எனவும் தன்னுடன் இந்தப்பொல்லடிக்கலையும் அழிந்துவிடும் எனவும் அச்சம் கொள்கிறார். தென்கிழக்கு முஸ்லிம்களின் அடையாளமாக இருந்துவரும் பொல்லடிக்கலை தற்போது மருவி வருவதோடு, அடுத்த சந்ததிகள் இவற்றைப் பயில முன்வரவேண்டும் எனவும் ஆருடம் கொள்கிறார்.


பாரம்பரிய கலையை இறக்காமத்திற்கும் ஏன், தென்கிழக்குப் பிராந்தியத்திற்கே பிரபல்யப்படுத்திய பீ.ரி.யாசின் பாவா அண்ணாவியார் நான்கு தலைமுறையாக பொல்லடிக் கலையை காத்து வந்த பொக்கிசம். இவர் எல்லோராலும் அறியப்பட்ட, அறியப்பட வேண்டிய கலை முதுசம் என்றால் அது மிகையாகாது. மனித ஆத்மா ஒவ்வொன்றுக்குள்ளும் தனித்திறமை கட்டாயம் இருந்தே ஆகும். அவற்றை வெளியில் கொண்டு வந்து, உலகுக்கு வெளிக்காட்டும் போதே ஒவ்வொரு மனிதரும் திறமையாளராகவும், சமூகத்தில் அங்கீகாரமும், கௌரவமும் அடைகிறார். அதற்காக ஒவ்வொரு இளைஞர்களும், கலைஞர்களும் தொடராக முயற்சிக்கவேண்டுமென புதிய தலைமுறைக்கு ஊக்கம் பகிர்கிறார்.

**அஸ்றம் காஸிம்,**
**இறக்காமம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏறாவூர் கொல்லம்பட்டறை



"முதலென்டு சொன்னா அடிக்கிறாளுக்கு இருநூறுரூபா இதைய்யுற அடிக்குற ஒராளுக்கு ஐந்நூறு ரூபாகூலி, மத்த அங்கால சம்மட்டி அடிக்குறாளுக்கு முன்னூறு ரூபா கூலி, ஊதுறவருக்கு ஐந்நூறு ரூபாக்கூலி, புடிக்கு நூறுரூபா, சீவுறத்துக்கு நுற்றிஜம்பதுரூபா, இரும்புக்கு ஒரு முன்னூறு போகும், கரிக்கு நூறுரூபா போனா அங்கால மிஞ்சுறது தான் நமக்கு வந்து சேரும் அதுலையும் கட வாடகை, வேலை செய்யுறவங்களுக்கு சாப்பாடு, தண்ணி என்டு போய் முடிய கணக்கு சரியாத்தான் இருக்கும் என்ன செய்யுறது. ஆனா ஒன்டுமில்லாம வந்தா சோத்துப்பாட்டுக்கு எப்பிடியும் கொழுவிடும் சீதேவியான வேலை மனே. உடம்புல ஒரு நோய் நொடி வர விடாது இப்பவும் திடகாத்திரமாத்தான் இருக்க வைச்சுக் கொண்டிருக்கு..."

ஏறாவூர் கொல்லம் பட்டறை ஊழியர் ஒருவரின் கருத்துப் பகிர்வுகள் இவை. நான் சிறு வயதிலிருந்து பார்த்து இன்புற்றவைகளில் கொல்லம்பட்டறை இயக்கமும் ஒன்று. இருந்தும் அவர்களின் இன்றைய நிலை பெரிதும் கேள்விக் குறியாக்கப் பட்டுள்ளமை வேதனையளிக்கிறது.

காலனிய/நவநாகரீக ஊடுருவல் இன்று இந்தவாறான தொழில் முனைவோரிலும் உட்சென்று பாதிப்பை ஏற்படுத்தி வருகின்ற நிலைமை குறிப்பிட்டுப் பேசியாக வேண்டியது அவசியம்.

"காலையில முகம் கழுவாம பிளேன்டீ குடிக்கலாமா மனே அதே போலத்தான் இந்த பட்டறைக்கு தண்ணி தெளிச்சி, பூ வைச்சி சந்தனக் குச்சி கொழுத்தி தான் வேலையத் தொடங்குவம் . இப்ப இதெல்லாம் எங்க தம்பி செய்யுறாங்கள் இதெல்லாம் எங்கட காலத்தோடையே இல்லாமப் போறதுதான். பொடியனுகள் எல்லாம் இந்த தொழில விரும்புறபாடும் இல்ல வாழ்க்கைத் தரமும் உயர்ந்திட்டே போகுது மிஞ்சுற காசு சாப்பாட்டுக்குத் தான் சரியா இருக்கு ம்ம்ம். இருந்தாலும் மனசுக்கு நிறைஞ்ச வேலை மனே.. ஆரம்பத்துல இந்த தொழில பறங்கி ஆக்கள் தான் செய்தாங்க பிறகு பிறகு தான் இடை மறுக நாங்களும் இந்த தொழில பழகினம் செய்தம். எங்கட அப்பா எல்லாம் இதே தொழில் தான் செய்தாங்க நாங்களும் அத அப்படியே பழகிட்டம். இன்டைக்கு வாற சைனா கத்தி எல்லாம் அவ்வளவு வேல இல்ல தம்பி மருந்து போட்டு அடிக்கானுகள் பாவிக்குறதும் குறைஞ்ச காலம் தான். ஆனா நாங்க நாடாங்கடைக்குப் போய் இரும்ப தேடி எடுத்து தரமான பொருளா அடிச்சிக் குடுக்குறம். புது இரும்பும் சொல்லி வைச்சி எடுக்குறதும்தான். நெடுக ராத்தி-ராத்தி பாவிக்கலாம். இன்டைக்கும் எங்கள நாடி சனம் வருகுதுதான் இருந்தாலும் முன்னத போல இல்லமனே. அப்பிடி இருந்தும் நாங்கபாக்குவட்டி, கோடாரி, மண்வெட்டி, அலவாங்கு. வாள்கத்தி, அருவாக்கத்தி, மேசக்கத்தி, திருவிளப் பல்லு என்டு எல்லாம் செய்து குடுத்துக் கொண்டுதான் இருக்கம் தேவைப்பட்டா சின்னச்சின்ன ஆயுதச் சாமானும் செய்து கொள்ளுவம்."

"வெட்டிரும்பு இருந்தாத்தான் இரும்ப வெட்டலாம், உலமுகம் கூட்டுற கம்பி இதாலதான் இந்த நெருப்ப கூட்டலாம். சுத்தியலாலதான் அடிக்கலாம், இந்த பொஞ்ச் இருந்தாத்தான் ஓட்ட பொக்கலாம் இல்லனா ரில்லுல தான் குடுத்து துளைக்கனும், இங்க நாங்க காச்சித் துளைக்குறனா லேசி. இராத்துறத்துக்கு அரமும் தேவ, புடிச்சி ராத்துறத்துக்கும் வெட்டுறதுக்கும் என்டு அங்கால-இங்கால அரக்காம இருக்க ஒரு புடிமான கேடரும் இருக்கு. பக்கத்துலையே வக்கு ஒன்டு கட்டி அதுல தண்ணியும் எடுத்து வைச்சிருப்பம் அதோட நெருப்ப பத்தவைக்க கரி முக்கியம் அதுலையும் காயான்ட அடிக் கொள்ளிக் கரிதான் தரமான கரி அடுப்புக்கரியும் இருக்கு அது சரிவராது. இப்ப எங்க தம்பி அதுல அரவாசி வெட்டாவெறும் தூள்-துகழ் தான் வருகுது. நாளுக்கு நாள் எல்லாச் சாமான்-சக்கட்டுக்கும் விலையும் கூடுது அதோட போன தடவ வாங்குன இரும்பு இப்ப வாங்கப் போனா எழுநூற்று ஐம்பது ரூபா ஒரே தடவையில கூடிருக்கு என்னத்த சொல்லுற... இப்பிடி இருக்கு எங்கட நிலை."

"இருந்தாலும் எங்களுக்கு வாற தொழிலால இன்னும் ரெண்டுபேர் வாழ வழியையும் செய்து கொண்டு தான் இருக்கம். அது எப்பிடி என்டா திருவிளப்பல்லு அடிச்சிக் கொடுக்கைக்க அதுக்குரிய இருக்கை குத்திய செய்து இத பொருத்தி சந்தைக்கு வரவைக்கைக்க எங்கள விட ஐஞ்சு - பத்து ரூபா கூடவே எடுத்துக் கொண்டுதான் இருக்காங்க இன்னும் ஒருசிலபேர். அந்த வகையில நாங்க இன்னும் ஒருத்தருக்கு தொழிலையும் கொடுத்துக் கொண்டு தான் இருக்கம் என்டைக்க சந்தோசம் தானே மனே!"

ஆக எம்மவர்களின் ஆளுமை மிக்கதும், மனிதாபிமானம் மிக்கதுமான உள்ளூர் உற்பத்தித் திறனை மேலும் வளர்த்தெடுக்க வேண்டியது எம்மை அண்டிய நகர சபைக்கும், பிரதேச சபைக்குமே உரித்துடைய கடமையும் பொறுப்புமாகும் என்பது எமது புரிதல். இந்தவாறு சிரமப்பட்டு கலைத்துவம் மிக்க பெறுமதியான தொழிலையும் சேவையையும் செய்து கொண்டிருக்கும் உள்ளூர் உற்பத்தி திறனர்களுக்குரிய போதிய மூலப் பொருட்களையும் அதற்குரிய சந்தைப்படுத்தலையும் உறுதிப்படுத்தி இலவச காப்புறுதித் திட்டத்தினையும் செய்து கொடுத்து அவர்களை ஊக்கப்படுத்துவது மட்டுமன்றி அவர்களினால் வெளிக்கொணரப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்புகளையும் அதன் தரத்தினையும் உலகறியச் செய்ய வேண்டியதும் இன்னும் இருமடங்காய் பயன்பாட்டுத்தளத்திற்கு கொண்டு வரப் பண்ணுதலுமே இன்றைய தேவையாகும்.

எனவே! இன்றைய நவநாகரீக காலத்தில் இலகுவாய் உடனடித் தேவையை கணப்பொழுதில் தீர்வுக் குரியதாய் கொணர்ந்து எம்மவர்களின் உள்ளூர் உற்பத்தியை மறந்து போகச் செய்கின்ற முறைமையை கட்டுடைத்து எமக்குள்ளே இருக்கின்ற வீரியம் மிக்கத்தொழில் முனைவோர்களையும் தொழிலையும் அடையாளம் கண்டு அவர்களுக்குத் தேவையான வாழ்வாதாரத்தினை உறுதிப்படுத்தும் வண்ணம் உகந்த நடவடிக்கைககள் எடுக்கப்படல் வேண்டும் என்பது பற்றியதாக பொதுத்தளங்களில் பேசப்படவும் எழுதப்படவும் வேண்டியது காலத்தின் கடப்பாடே.

-கு. மதுசாந் -
ஏறாவூர்


மூன்றாவதுகண்
விளம்பி

**உருவாக்கப் பரிமாற்ற குழாம்**

சி.ஜெயசங்கர் து.கௌரீஸ்வரன்
இரா.சுலக்ஷனா ரா.ரேவதி
கி.கலைமகள் செ.சுமித்ரா
இ.கிறிஷ்டி உ.பிரியதர்சன்
சி.ஜெயபிரதாப்

**தொடர்புகட்கு**
153A, விமான நிலைய வீதி,
9ம் குறுக்கு, திருப்பெருந்துறை, மட்டக்களப்பு.

**அன்பளிப்பு - ரூபா 40.00**

**ISSN No. 2773-7144**

இச்செய்திமடல் 153A, விமான நிலைய வீதி, 9ம் குறுக்கு திருப்பெருந்துறை, மட்டக்களப்பு எனும் முகவரியில் வசிக்கும் சி.ஜெயசங்கர் அவர்களால் பஸ்தரிப்பு நிலையம், மட்டக்களப்பு எனும் முகவரியிலுள்ள PS Printers இல் 08.03.2022 ஆந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.





# தொழில் முனைவும் பெண் சுயதொழில் முயற்சியாளர்களும்.

ஈழத்தில் யுத்தம் நிறைவுற்றதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்கள் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பல்வேறு சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவற்றில் அதிகமானவர்கள் பெண் சுயதொழில் முயற்சியாளர்களாகக் காணப்படுகின்றனர். குடும்பத் தலைமைப் பொறுப்பினை ஏற்ற பெண் தலைமைத்துவக் குடும்பங்களும், கணவனை இழந்த பெண்களும், வாழ்கையில் பெண்கள் எதற்கும் சளைத்தவர்கள் அல்ல என்பதை எடுத்துகாட்டும் வகையில் மண்ணின் வைரங்களாக பெண் சாதனையாளர்களாகச் சிறந்து விளங்குகின்றனர். அவ்வாறானவர்களை இனங்கண்டு அவர்களை வெளிப்படுத்துவதில் மூன்றாவதுகண் நண்பர்கள் குழுவினர் கிழக்கிலங்கையில் செயற்பட்டு வருகின்றனர். இவர்கள் ஊடாக உள்ளூர் உற்பத்திகளை விளம்பரப்படுத்தும் நோக்கில் விளம்பி இதழ் வெளியீடு செய்யப்படுகின்றது. அவ்வகையில் எமது பிரதேச சுயதொழில் முயற்சியாளர்களுக்கு ஆதரவளித்து வலுச்சேர்க்கும் வகையில் இக்கட்டுரையை சமர்ப்பிக்கின்றேன்.

வன்னி மண்ணில் வவுனியா மாவட்டத்தில் பல்வேறு கைப்பணிசார் உற்பத்திகள் இடம்பெற்று வருகின்றன. வவுனியா பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட மரக்காரம்பளை கிராமசேவகர் பிரிவில் மணிப்புரம், சமயபுர கிராமத்தை சேர்ந்த பெண்கள் தமது சுயதொழில் முயற்சியாக பத்திக் (Batik) சார் உற்பத்திகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆரம்பத்தில் இக் கிராமங்களிற்கான எவ்வித அடிப்படை வசதிகளும் கிடைக்கப் பெறாத நிலையில் பெண்கள் இணைந்து தமது வாழ்வாதரத்தை முன்னெடுக்கும் நோக்கிலே சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டுவருகின்றனர்.

இன்று இவர்களின் செயற்பாட்டை அவதானித்த மாவட்ட செயலகம் மற்றும் வவுனியா பிரதேச செயலகம் அவர்களின் செயற்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் மேலதிக பயிற்சிகள், பத்திக் (Batik) உற்பத்திக்கான பொதுக்கட்டடம், தொழில்நுட்ப வசதிகள், கடன் உதவிகள் முதலியவற்றை வழங்கி வருகின்றது. பத்திக் (Batik) உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்தி அவர்களின் உற்பத்திகளை சந்தைப் படுத்துவதற்கும், கண்காட்சிகளில் காட்சிப்படுத்தவும் என பல்வேறு வகையில் துணைநின்று செயற்பட்டு வருபவராக வவுனியா பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தரான ப.வயலட் அம்மையார் காணப் படுகின்றார்.

உள்ளூர் உற்பத்திகளை பிரதேசம் கடந்து பரவலாக்கம் செய்து அனைத்து மக்கள் மத்தியிலும் கொண்டு சென்று அவர்களின் உற்பத்திகளை வநியோகம் செய்ய வேண்டிய தேவை இன்று உள்ளது. அவ்வகையில் லிங்கராசா ஜெகதீஸ்வரி அம்மையார் பத்திக் (Batik) உற்பத்தியில் நன்கு தேர்ச்சி பெற்றவராகவும் நெடுங்காலமாக தரமான உற்பத்திகளை சமூகத்திற்கு வழங்கி வருபவராகவும் காணப்படுகின்றார். இவரது பத்திக் வடிவமைப்புக்கள் மகாணமட்ட மற்றும் மாவட்ட மட்ட போட்டிகளில் உள்ளூர் கைப்பணி வடிவமைப் பிற்கான விருதுகளை பெற்றுள்ளது. தேசிய அருங்கலைகள் பேரவை ஊடாக The master crafts man training course இற்காகத் தெரிவு செய்யப்பட்டு மேலதிக பயிற்சி பெற்று தமது தரமான படைப்புகளை உற்பத்தி செய்து வருகின்றார். Provincial Industriyal exhibition - 2017 இல் பத்திக் சாறி வடிவமைப்பிற்கான முதல் பரிசினை பெற்றுள்ளார். ஜனாதிபதி கைப்பணி விருதான சில்ப அபிமானி விருது - 2016 விருதினையும் பெற்றுள்ளார். அவ்வகையில் இவரது படைப்புக்கள் தரமான தாகவும், பிரதேச ரீதியான வடிவமைப் பாகவும் அமைந்திருந்தது. இவரது முயற்சியை கௌரவிக்கும் விதமாக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் சுயதொழில் முயற்சியாள ருக்கான விருதும் வழங்கப்பட்டது.

ஜெகதீஸ்வரி அம்மையார் இத்துறையினை வெறும் வியாபார நோக்கமன்றி விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் மக்கள் விரும்பும் வகையில் வடிவமைப்புக்களை கலை நுணுக்கங்களுடன் மேற்கொண்டு வருகின்றார். ஈழத்து படைப்புக்கள் என்பதால் இவர் தமிழ் மக்களின் கூத்தில் முக்கிய இசைக்கருவியாக பயன்படும் மத்தள வாத்திய இசைக் கருவியினை அலங்கார வடிவமாக பயன்படுத்தி பத்திக் உற்பத்திகளை மேற்கொண்டிருந்தார். இவை உள்ளூர் மக்கள் மத்தியில் அதிக கவனத்தை ஈர்த்து, அதிகளவில் விற்பனை செய்யப்பபட்டிருந்தது. மேலும் பிரதேச ரீதியிலான மலர்கள், இலை, கொடி அலங்காரங்கள், மரபு ரீதியான பண்பாட்டு விடயங்களை உள்வாங்கி இவரது படைப்புக்கள் வெளிவரு கின்றன. மரபு ரீதியான விடயங் களைத் தற்காலத்தில் மக்கள் விரும்பும் வகையில் நவீன வடிவமை ப்புக்களாக மேற்கொண்டு வருகின்றார். பத்திக் ஆடைகளை தைத்து வடிவமைப்பு செய்தும், ஆண்களுக்கான சாறம், சேட்டிற்கான துணிகளையும், பெண்களுக்கான பத்திக் சாறி, சட்டைத்துணி, சிறுவர் அலங்கார ஆடைகளையும் வடிவமை ப்பு செய்து அதிக வரவேற்பினை பெற்று வருகின்றார்.



இவரது உற்பத்திகள் உள்ளூரில் மட்டுமன்றி தேசங்கடந்தும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சமீப காலமாக கோவிட் காரணமாக பிரதேசங்க ளுக்கு இடையிலான போக்குவரத்து தடை நீடிப்புக்களால் உற்பத்தி வீழ்ச்சி கண்டுள்ள போதிலும் இயன்றளவான உற்பத்திகளை செய்துவருகின்றார். கணவன் கூலித்தொழில் செய்து வருகையில் குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதாத நிலையில் குடும்பத்திற்கு உதவியாக தன்னிடம் உள்ள கலையார்வத்தைப் பயன் படுத்தி தையல் கலை மற்றும் பத்திக் உற்பத்தியில் ஈடுபட்டு வருமானம் ஈட்டிவரும் நிலையில் இன்றைய காலப்பகுதியில் வாழ்வாதார சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர். இத்தருணத்தில் எமது பிரதேசம் சார் உற்பத்திகளை நாங்கள் பெற்றுக் கொண்டு சுயதொழில் முயற்சியாளர் களுக்கு உதவிபுரிய கடமைப்பட் டுள்ளோம்.

தனது வீட்டில் குடும்பத்தின் உதவியுடன் சிறிய தொகை முதலீட்டில் 2012 இல் இருந்து பத்திக் பயிற்சிகளை முறைப்படி பெற்று உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றார். இக்கால கட்டத்தில் குடும்பநிலை கருதி சவுதி அரேபியாவில் பணிப் பெண்ணாக தொழில் புரிந்துவரும் அவரது தாயார் சண்முகம் சுந்தரி அம்மையார் பத்திக் உற்பத்தியை விரிவுபடுத்த தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கி ன்றார். பணிபுரியும் காலம் முடிந்து மீண்டும் இலங்கை திரும்பியதும் மகளிற்கு உதவியாக பத்திக் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றார். சகோதரியான செல்லத்துரை சித்ரா பாடசாலைக் கல்வி முடிவுற்றதும் ஜெகதீஸ்வரி அம்மையாரிடம் பத்திக் பயிற்சியினை பெற்று பத்திக் உற்பத்திகளை செய்து வருகின்றார்.


2016ம் ஆண்டு தாயாரின் முயற்சியினால் 'டினா பத்திக்' எனும் பெயரிடப்பட்டு பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்டது. பத்திக் உற்பத்திகளை கண்காட் சிகளில் காட்சிப்படுத்தவும், உள்ளூர் சந்தைகளில் விற்பனை கூடம் அமைத்து உற்பத்திகளை காட்சிப் படுத்தல் என அனைத்து செயற்பாடு களையும் முன்னின்று செய்பவராக சண்முகம் சுந்தரி அம்மையார் காணப்படுகின்றார். வயது எதற்கும் தடையல்ல மனமிருந்தால் போதும் எனும் வகையில் 56 வயதிலும் பெண் சுயதொழில் முயற்சியாளராகத் தனது செயற்பாடுகளை முன்னெடுப்பதுடன் மகளிற்கும் துணையாக செயற்பட்டு வருகின்றார்.

தமது குடும்பத்திற்காக தேசம் கடந்து இரவு, பகலாக தொழில் புரியும் சகோதரனின் பெயரை இவ் பத்திக் (Batik) உற்பத்திகளுக்கு வைத்துள்ளனர். டினா பத்திக்கினை பெண்சுயதொழில் முயற்சியாளர் களான சண்முகம் சுந்தரி, லிங்கராசா ஜெகதீஸ்வரி, செல்லத்துரை சித்ரா ஆகியோர் தொடர்ந்து முன்னெடுப்ப வர்களாக காணப்படுகின்றனர். இவர்களது தொடர் செயற்பாட்டினை அவதானித்த பிரதேச செயலக கைப்பணி குழுவினர் மரக்காரம்பளை கிராம சேவகர் பிரிவிற்குடபட்ட சில பெண்களை தெரிவு செய்து பத்திக் பயிற்சிகளை வழங்கி அவர்களு க்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றது. அவ்வகையில் இக்கிராமம் ஒரு கைப்பணிக் கிராமமாக உருவாக்கம் பெற்று வருவதைக் காண முடிகின்றது.



உற்பத்தியாளர்கள் பத்திக் உற்பத்திக்கான மூலப் பொருட்களை வவுனியா பிரதேசத்தில் பெற்றுக் கொள்ள முடியாததால் கொழும்பில் இருந்து தரமான துணி, சாயம், மெழுகு என்பவற்றைப் பெற்று பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் தனது விடாமுயற்சியாலும் குடும் பத்தின் உதவியுடனும் தொடர்ந்து சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறான சுயதொழில் முயற்சியாளர்களின் படைப்புக்களைப் பெற்று அவர்களின் செயற்பாட்டை ஊக்குவிப்பதுடன் வாழ்வாதாரத்திற்கு உதவிபுரிவோம்.

**-ச. மகிழினி - வவுனியா**



**தொடர்புகளுக்கு :**
**டினா பற்றிக் உற்பத்திகள்,**
**லிங்கராசா ஜெகதீஸ்வரி,**
**1ம் ஒழுங்கை பாடசாலை வீதி,**
**சமயபுரம்.**
**தொலை பேசி 0778308009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்துறை உள்ளூர் ஆளுமையாக அண்ணாவியார் பொ. சுந்தரமூர்த்தி

இலங்கைத் தீவின் கிழக்கு மாகாணத்தில் கலைப் பாரம்பரியங்கள் பரப்பப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்திலே கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட இயற்கை வளங்கள் நிறைந்து பச்சை பசேலென காணப்படும் காடும் காடு சார்ந்த முல்லை நில அமைப்பைக் கொண்ட பிரதேசமான குடும்பிமலைப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்து வரும் கலைஞரே சுந்தரமூர்த்தி அண்ணாவியார். இவரைப் பெரும்பாலும் மூர்த்தி அண்ணாவியார் என்றே கூறுவர். இவர் 1956ஆம் ஆண்டு மா.பொன்னுச்சாமி மு.நாகம்மா ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்.

இவர் பாடசாலைக் கல்வியை கிரான் தமிழ் கலவன் பாடசாலையில் பயின்றார். விவசாயக் குடும்பப் பின்னணி கொண்டு வாழ்ந்து வந்த சுந்தரமூர்த்தி அண்ணாவியார் தனது சிறுவயது முதல் ஊரில் அடிக்கப்படும் களரிகளில் சென்று கூத்துக்களை பார்த்தும், கேட்டும் அதன் தன்மையில் விருப்பப்பட்டு அதன் மீது தனது ஆர்வங்களை நுழைத்துக் கொண்டார். இதன் பின்னர் சந்திவெளி, கோரகல்லிமடு போன்ற பிரதேசங்களில் ஆடப்படும் கூத்துக் களையே அதிகம் பார்த்துள்ளார். மாரி காலங்களில் கூத்துக்கள் களரி யடிக்கும் இடங்களுக்குச் சென்று பார்ப்பதன் மூலமும் செவியுற்று கேட்ட பாடல்களை மனனம் செய் வதன் மூலமும், செல்லும் வழியெல் லாம் நெஞ்சிலும் தொடையிலும் தாளம் போட்டுப் பழகியும் மத்தள அடியின் நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டார்.

இதன் பிற்பாடு சித்தாண்டி பிரதேசத்துக்கு திருமணமாகி சென்றதன் பின்னர் அங்கு வேல்முருகு, பொன்னையா எனும் இருபெரும் அண்ணாவிமார்களுடன் சேர்ந்து தனது கூத்துப் பயணத்தினைத் தொடர்ந்துள்ளார். இப்பயணம் சித்தாண்டி பிரதேசத்தை மையமாகக் கொண்டு நடைபெற்றுள்ளது.

இவை அனைத்துக்கும் முன்னதாக இவர் ஆரம்ப காலங்களில் மத்தள அடிகளைப் பழகுவதற்காக முட்டியின் வாயிலில் உடும்புத் தோலினைக் கட்டி (நம்மாணம் கட்டி) தனிமையில் பழகி வந்தார். தனது குருவாக இவர் வேல்முருகு மற்றும் பொன்னையா இருவரையுமே பின்பற்றத் தொடங்கினார். இதன்பின்னர் இவர் கூத்துக்களின் மொத்தத் தாளக்கட்டுக் களையும் தனியாக அடிக்கத் தொடங்கினார். மத்தளம் அடிக்கின்ற பொழுது ஏற்படுகின்ற பிழைகளை அக்கணத்திலேயே தான் குருவாக மதிக்கின்ற வேல்முருகு, பொன்னையா ஆகியோர் திருத்தி தன்னைப் பயிற்றுவித்தமையைப் பெருமையுடன் கூறுகிறார்.



தனது 30 ஆவது வயதில் குருக்கேத்திரன் போர் கூத்தினை முழுமையாக அடித்தார். பின்னர் 14-ஆம் போர் வேல்முரு அண்ணாவியாருடன் இணைந்தும், மயில்ராவணன் தென்மோடி கூத்து பொன்னையா அண்ணாவியாருடன் இணைந்தும் மத்தள அண்ணாவியாராக தொழிற்பட்டார். ஆரம்பத்தில் வேல்முருகு அண்ணாவியாரின் மகன் செல்வம் (வே.தம்பிமுத்து) அவர்களுடன் இணைந்து 1986 இல் பவளக்கொடி வடமோடிக் கூத்துக்கு மத்தள அண்ணாவியாராக பங்காற்றியுள்ளார். அது மாத்திரமல்லாமல் அனைத்து கூத்துக்களின் ஆட்டக் கோலங்களையும் ஆடக்கூடிய ஒரு சிறந்த ஆட்டக்காரராகவும் அவர் காணப்பட்டார்.

இவ்வாறாக கலைகளின் மீது தனது ஆர்வங்களைக் கொண்டு தனது திறமைகளை வெளிக்காட்டிக் கொண்டிருந்தாலும் கூட, தனக்கான ஒரு சொந்தத் தொழிலை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கோடு தச்சுத் தொழிலைச் செய்ய ஆரம்பித்தார். அது சார்ந்து இயங்கிய போது தான் ஆர்வத்தோடு பழகியுள்ள மத்தள வாத்தியங்களை உருவாக்கும் நுட்பங்களையும் படிப்படியாக கற்கத் தொடங்கி வாத்தியங்களை உருவாக்கும் தொழில் நுட்பத்தை அறிந்து கொண்டு அதனைப் பின்னர் தொழிலாகவும் மேற்கொள்ளத் தொடங்கினார். இதன் பின்னராக அனைத்து வகையான உள்ளூர்த் தோல் வாத்தியக் கருவிகளையும் உருவாக்கும் முயற்சியில் மும்முரமாக ஈடுபடத் தொடங்கினார்.


இவ்வாறாக இன்றைய இருபத்தியோராம் நூற்றாண்டிலும் இதற்கு முன்னரான காலப்பகுதியில் எவ்வாறு இன்றைய நவீன தொழில் நுட்பங்கள் இல்லாமல் இயற்கையில் கிடைக்கும் வளங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட கை இயந்திரங்களின் மூலம் பட்டறைகள் அமைத்து உள்ளூர் வளங்களைக் கொண்டு தாங்கள் அமைத்துக்கொண்ட கருவிகள் மூலம் வாத்தியக் கருவிகளை உருவாக்கினார்களோ அதேபோன்று இன்றைய அதிநவீன தொழில்நுட்பம் நிறைந்த நவகாலனிய சூழலிலும் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் தனது தொழிலின் ஆரம்பம் எவ்வாறு சுயசார்புடன் ஆரம்பித்ததோ அதனைப் போன்றே இன்றும் எந்த வித நவீன தொழில்நுட்ப சாதனங்களையும் நம்பியிராமல் அவற்றை எதிர்பார்க்காமல் தனது 64 ஆவது வயதிலும் குடும்பிமலை எனும் அழகிய இயற்கை பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு கிடைக்கப்பெறும் வளங்களைக் கொண்டு தான் உருவாக்கியுள்ள தொழில் பட்டறை மூலமாக மத்தளம், பறை, உடுக்கை, சவணிக்கை போன்ற உள்ளூர் வாத்தியக் கருவிகளை உருவாக்குவதினூடாக தொழிலின் மீது அவர் காட்டுகின்ற நாட்டம் இருபத்தோராம் நூற்றாண்டு நவ காலனிய காலத்திலே எம்மைப் பிரமிக்க வைக்கின்றன .

மற்றும் குடும்பிமலை பிரதேசமானது காடும் காடு சார்ந்த இடமும் என்பதனால் அங்கு அனைத்து வகையான மூலிகை வகைகளையும் பெற்றுக் கொள்ள வாய்ப்பாக அமைவதினால் முன்னோர்கள் கண்டு பிடித்து குறித்து வைத்துவிட்டுச் சென்ற ஏட்டுச் சுவடிகளைக் கற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் இயற்கை வைத்தியத்தை மேற்கொண்டு வருகின்றார். இதன் மூலமாக எண்ணெய் வகைகளை தயாரித்தல், பத்துப்போடல் என உள்ளூர் வைத்திய நடவடிக்கைகளிலும் தன்னை ஈடுபடுத்தி வருகின்றார். அத்தோடு கொத்தனார் (மேசன்) தொழிலையும் இன்றும் செய்துகொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ்வாறாக விவசாயம், தச்சுத்தொழில்,



வாத்தியங்கள் உருவாக்கம், உள்ளூர் வைத்தியத் துறை, கொத்தனார் வேலை எனப் பல்வகைத் தொழில் திறனும் அனுபவங்களும் கொண்ட ஒரு சிறந்த பல்துறைக் கலைஞராக, உள்ளூர் ஆளுமையாக திரு சுந்தரமூர்த்தி அண்ணாவியார் திகழ்கின்றார்.

**சு.சஞ்சீபன்**
**சந்திவெளி**

# நான் கண்ட என் அம்மப்பா அம்மம்மாவின் இயற்கையுடன் சேர்ந்த வாழ்க்கைமுறை


**நா**ன் பாலய வயதினையுடையவளாக இருக்கும் போது எனது அம்மப்பா அம்மம்மாவின் வாழ்க்கையுடன் இணைந்து வாழ்ந்ததை இன்று நினைத்து வியப்பதுண்டு. எனது அம்மப்பா அம்மம்மா அவர்களின் குடும்பம் ஒரு விவசாய குடும்பமாகும். அவர்களிடம் மாடுகள், வயல்கள், சேனைப்பயிர்கள் என்பன இருந்தன. அவர்கள் விவசாயத்திலும், சேனைப் பயிர்செய்கையிலும் மாறிமாறி ஈடுபடுவார்கள்.

வேளாண்மையானது இரு போகங்களிலும் செய்யப்படும். கால போகம் (மழையை நம்பிச் செய்வது) இடை போகம் குளத்திலுள்ள நீரினை அடிப்படையாகக் கொண்டு செய்வது. சேனைப் பயிர்செய்கை மழைக் காலங்களில் செய்யப்படும். ஏனெனில் அது மேட்டு நிலமாகும். எனவே மழை பெய்யும் காலங்களில் தான் சேனைப்பயிர்ச்செய்கை செய்வார்கள்.

சேனைப் பயிர்செய்கை மிகவும் ஆனந்தமானது. அப்போது சேனைக்குப் போவதென்றால் எங்களுக்கெல்லாம் ஒரே குதூகலந்தான். அனேகமாக எல்லாப்பயிர்களும் விளையும் நேரம் தான் எங்களுக்குச் சேனைக்குச் செல்ல அனுமதி கிடைக்கும். அதுவரை பெரியவர்கள் மாத்திரம் தான் சேனைக்குச் செல்வார்கள். சேனைப் பயிர் செய்கை ஆரம்பிக்கும் போது காடுகளை வெட்டி நாட்டுக் கட்டைகளை பற்ற வைத்து எல்லைகளிலே முட்செடிகளைக் கொண்டு வேலிகள் அமைத்து பயிர்களை இடுவார்கள். அத்துடன் சேனையில் காவல் காப்பதற்கு பரண்களும் அமைப்பார்கள். சிலர் தற்காலிக பரண்களையும் சிலர் சில வசதியான சிறிதுகாலம் நிலைத்து நிற்கும் பரண்களையும் அமைப்பார்கள்.

**பரணின் அமைப்பு**

எனது அம்மப்பாவும் அம்மம்மாவும் மிகவும் அழகிய மாடியமைப்புக் கொண்ட பரண்களை அமைத்திருப்பார்கள். அந்தப் பரணானது இரண்டு அடுக்குகளைக் கொண்டது. கீழிற்கு சமைப்பதற்கும் மேலிற்கு உறங்குவதற்குமான இரண்டு சிறிய அறைகளைக் கட்டியிருப்பார்கள்.



ஓவியம் - கோ.மதிஸ்குமார்

பரண்கள் மரந்தடிகள், களிமண், புற்றுமண் அத்துடன் முட்செடிகள் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும். கீழ்த்தளத்தில் அடுப்புகள் இரண்டு களியினால் கட்டப்பட்டிருக்கும். அத்துடன் சமைப்பதற்கு மண்ணினாலான ஒரு பானையும் சில சட்டிகளும் இருக்கும். அடுப்பிலே எப்போதும் ஒரு தேனீர்ப்பானை இருந்து கொண்டேயிருக்கும். வெளியில் இருக்கும் தட்டியிலே ஒரு தட்டில் நிரந்தரமாக நன்னாரி வேர்கள் காய்ந்து கொண்டிருக்கும். தேனீர் குவளையாக சீவிய சிரட்டைகள் அடுப்புக்கட்டின் பக்கத்தில் அடுக்கப்பட்டிருக்கும். நன்னாரித் தேனீரை கருப்பட்டியுடன் அல்லது சீனியுடன் தொட்டு நக்கி குடிப்பது ஒருவித புத்துணர்ச்சியைக் கொடுக்கும்.

மேல்தட்டு படுப்பதற்கும் வசதியாகக் கட்டப்பட்டிருக்க மேலுக்கு ஆங்காட்டு சுரைக்குடுவைகள் தொங்கிக் கொண்டிருக்கும். ஒரு சுரைக்குடுவையில் தண்ணீர் நிரப்பி சிரட்டையினால் மூடி படுக்கும் போது தலைமாட்டிலே அம்மப்பா வைத்திருப்பார். சோளனைப் பார்க்க வெகு அழகாக இருக்கும். ஒரு பக்கம் கச்சான் மஞ்சள் நிறத்திலே பூத்துக் கொண்டிருக்கும். பூ கருகியிருக்கும் இடத்திலே கச்சானை பிடுங்கிக் கொண்டிருப்பார்கள். இன்னொரு பக்கம் மரவள்ளி, பூசணி காய்த்திருக்கும். பயத்தங்கொடி, வெண்டி, மிளகாய், கத்தரி பயிரிடப்பட்டிருக்கும்.

சேனையின் ஒரு மூலையிலே ஒரு பூவல் வெட்டியிருப்பார்கள். நீரை எடுப்பதற்கு நல்ல சரிவாக நடந்து செல்வதற்கு ஏற்றவாறு பூவல் வெட்டப்பட்டிருக்கும். நீரை எடுப்பதற்கு ஒட்டைச் சுரக்குடுவையை அமிழ்த்தி பூச்சி புழுக்களற்ற தூசியற்ற நீரை சிரட்டையால் அள்ளி அள்ளி பானையில் எடுத்து குடிப்பதற்கு எடுப்பார்கள். எனக்கு பூவலில் நீர் எடுப்பது மிகவும் பிடிக்கும். பூவலினுள் பார்க்கும் போது நீர்ப்பூச்சிகள், சிறிய மீன்கள், தவளைக் குஞ்சுகள் என்பன ஓடித்திரியும். அதனால் ஒட்டைச் சுரக்குடுவையை அமிழ்த்தும் போது இவை அனைத்தும் இல்லாத தெளிந்த நீரை எடுக்கலாம்.

சேனையைத் தாண்டி சிறிது தூரத்தில் சிறிய குளம் ஒன்று உள்ளது. குளிப்பது, உடுப்புக் கழுவுவது அந்தக் குளத்தில் தான். அதில் மீன்களும் பிடிக்கலாம். அடிக்கடி அம்மப்பா அக்குளத்தில் அத்தாங்கினால் மீன் பிடித்துக் கொண்டு வருவார். குளத்தில் பிடிக்கப்படும் மீன்களில் குரட்டை, பளையான், கொக்குச்சான், செல்வன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன சிலவாகும்.


அம்மப்பா சேனையில் காவல் காப்பதே தனித் திறமையாகும். அவரின் உடல் சோம்பலில் அதாவது நித்திரை விழிக்காமலும் அத்துடன் காட்டு விலங்குகளை விரட்டியும் செல்வதற்கும் வசதியாக சேனையில் நான்கு மூலையிலுமுள்ள பெரிய மரங்களில் நான்கு சகடைகளைக் கட்டி அந்த நான்கு சகடைகளையும் கயிற்றிலே கட்டி கொண்டு வந்து அவற்றை இழுப்பதற்கு வசதியாக ஒரு வளையத்தைக் கட்டி அவர் நித்திரை கொள்ளும் பொழுது அவரின் காலிலே மாட்டி கொள்வார். அவர் அசையும் பொழுதெல்லாம் சகடை சத்தம் போட்டுக் கொண்டிருக்கும். காவலுக்கு காவலுமாகி விட்டது. அவரின் நித்திரையும் பறிபோகாது.

அது மட்டுமல்லாது இரவிலே காவலுக்கு நிற்கும் போது நித்திரைக்குப் போக முன் சேனையின் நான்கு மூலைகளிலும் நின்று ஏதோ சொல்லி கூவிச் செல்வார். பக்கத்து சேனையாளர்கள் சேதி சொல்லி விட்டார் இனி நாம் நமது சேனையைக் கவனமாக காவல் காக்க வேண்டும் என்று அம்மப்பாவினது சார்பாகச் சொல்வார்கள். என் உறவு நீங்கள் என்றபடியால், என் அம்மப்பா காட்டு விலங்குகள் வராமல் இருக்க அப்படிச் செய்வதாகக் கூறுவார். அது அவர்களின் நம்பிக்கையாக இருக்கும் என நினைக்கிறேன்.

இது அவ்வாறிருக்க சேனைக்குச் செல்வது மிகவும் ஆனந்தமான விடயம். ஏனெனில் எங்களது கிராமத்திலிருந்து வெகு தூரத்தில் தான் சேனையுள்ளது. நாங்கள் அம்மப்பாவின் மாட்டு வண்டியிலே தான் செல்வது வழக்கம்.

சேனைப் பயிர் செய்கையின் போது அம்மப்பா அம்மம்மா இருவரும் அடிக்கடி சேனைக்குச் செல்வார்கள். பயிர்கள் விளையும் போது நிரந்தரமாக அங்கு நின்று அறுவடை முடிந்ததும் தான் வீட்டுற்குத் திரும்பி வருவார்கள். அடுத்த நாள் அதிகாலையிலே எங்களைக் கூட்டிக் கொண்டு செல்வார். சேனைக்கு மாட்டு வண்டியிலே காட்டுவழியே பயணிப்பது மிகவும் சந்தோசமாகும். இப்போது நினைத்தாலும் நினைவுகள் பசுமையாக இருக்கின்றன.

காட்டு வழியிலே போகும் போது அடிக்கடி வண்டிலை நிறுத்தி காட்டுப் பழங்களைச் சுவைத்துச் செல்வது மிகவும் சந்தோசமான விடயமாகும். அந்த வண்டிப்பாதையின் ஓரத்தில் நிறைய கிழா மரங்கள் நிறைந்திருக்கும். கிழாப்பழங்கள் மிகவும் சுவையானவை. காய் நல்ல புளிப்பும் பழம் இனிப்பும் புளிப்பும் கலந்தது. அதுமட்டுமில்லாது தண்ணிச் சோத்துப் பழம் என்னும் ஒரு காட்டு பெசன்புறுட் கொடி அதுவும் நிறையவே படர்ந்து காணப்படும். அந்த காட்டுபெசன்புறுட் பழங்களையும் பறித்துச் சாப்பிட்டு கொண்டு தான் செல்வோம். அதுமட்டுமல்லாது போகும் வழியில் காட்டுக் கோழிகள் நிறையவே இருக்கும். சில நேரங்களில் காட்டுக்கோழி முட்டைகளும் எடுத்துக் கொண்டு செல்வோம். அத்துடன் அம்மப்பா எச்சரித்தபடி வருவார். காட்டு தேனிகளும் பூச்சி பூரான்களும் இருக்கும் கவனித்து பயணிக்க வேண்டுமென்று. பூச்சிகள் என்று பெரும்பாலும் பாம்புகளை தான் சொல்வார்கள். நாங்கள் வசதியாக கைகளிலே ஒரு நீண்ட தடியுடன் கூடிய குழைகளை வைத்திருப்போம். காட்டினுள் செல்லும் போது தட்டித் தட்டித்தான் உள்ளே செல்வோம்.



மற்றும் சேனையிலே சமைக்கும் சாப்பாடு அவ்வளவு நன்றாக இருக்கும். அம்மம்மாவின் சுரைக் கொழுந்துக் கடையல், குமிட்டிக் கடையல் மிகவும் நன்றாக இருக்கும். அம்மம்மா சமைக்கும் போது பார்த்து பார்த்து சமைப்பார். நாங்கள் குளத்திலே முழுகினால் குளிர்ச் சாப்பாடு சாப்பிடக்கூடாது என்று சிலவற்றைத் தவிர்த்து விடுவார்கள். உதாரணமாக சுரக்கொழுந்து, வெண்டிக்காய், தக்காளி, பூசணிக்காய் அவற்றை ஒரே நேரத்தில் சமைக்க மாட்டார். ஒரு சூட்டு மரக்கறி எனில் ஒரு குளிர் மரக்கறி அப்படித்தான் சமைத்துத் தருவார். அத்துடன் சேனையிலே உள்ள ஐந்து இலைகளில் கூட்டுக்கறி அம்மப்பாவிற்கு மிகவும் பிடித்தது. அதாவது காரை, கானாந்தி, முல்லை, முருங்கை, முசுட்டை முதலியவற்றுடன் மரவள்ளிக்கிழங்கு சேர்த்து சமைப்பார்கள். அது அம்மப்பாவின் விருப்பமான ஒரு கறி. இவற்றில் சில இலைகள் இல்லாவிட்டாலும் கானாந்தியும் மரவள்ளிக்கிழங்கு வெள்ளைக்கறியும் சேனைச் சாப்பாடுகளில் எனக்கு மிகவும் பிடித்தமானது. நினைவுகள் தொடரும்..

**உமாரமணி மதிவேந்தன்**

பத்தையென்றும்
செத்தையென்றும்
வெட்டி அழிக்கிறோம்
புல்லு என்றும் பூண்டு என்றும்
பிடுங்கி எறிகிறோம்

களைகளென்றும்
முட்களென்றும்
அழித்து ஒழிக்கிறோம்
இலகுவழியில் இரசாயனத்தால்
எரித்து அழிக்கிறோம்

உணவென்றும் மருந்தென்றும்
இருக்கும் செல்வத்தின்
உண்மை அறிவை
எப்படித்தான்
இழந்து போய்விட்டோம்? -
நாங்கள்
இழந்து போய்விட்டோம்!

விபரம் அறியா மனிதராக
மாறிப் போய்விட்டோம்
உண்மை அறிவை
எப்படித்தான்
இழந்து போய்விட்டோம் -
நாங்கள்
இழந்து போய்விட்டோம்

உண்மை அறிவைத்
தேடிப்பெற்று
உயர்வு கொள்ளுவோம்
உலக இயல்பைக் காத்து
உயிர்கள் வாழும் வழிகள்
காணுவோம்
உலக இயல்பைக் காத்து
உயிர்கள் வாழும் வழிகள்
காட்டுவோம்

உள்ளம் உவகை கொள்ளும்
வாழ்வை
உலகில் ஆக்கி மகிழுவோம்
உயிர்கள் எல்லாம் இயற்கை
மடியில்
வாழ வாழுவோம்.

**-சி. ஜெயசங்கர்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org